Tc. 118

# 135/DD/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS
## THE JAIL TEST PART – I (b) CODE OF CRIMINAL PROCEDURE

(Without Books)

Maximum Time : 2 hours | Maximum Marks : 80

### *IMPORTANT INSTRUCTIONS*

### OBJECTIVE TYPE
கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **<u>within first 10 minutes</u>** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers in the best.**
   (b) In any case, a candidate shall choose only one response for each question.
   (c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**
   (d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)
   (a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**
   (b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.
   (c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**
   (d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Warrant shall remain in force

(A) For Two Years
(B) Until it is Cancelled
(C) Until it is executed
(D) Both (B) & (C)

பிடியாணை அமலில் இருக்கும் காலம்

(A) இரண்டு ஆண்டுகள்
(B) நீதிமன்றத்தால் ரத்து செய்யப்படும் வரை
(C) கைது செய்யப்படும் வரை
(D) (B) மற்றும் (C) இரண்டும்

2. When a Person who is Competent to Compound an offence is dead, Under sec 320 of CrPc then compounding

(A) offence cannot be done
(B) offence can be by the state
(C) Can be done by the legal representative without the consent of the court
(D) Can be done with the Consent of the Court by the legal representatives

பிரிவு 320 சட்டத்தின்படி குற்றமொன்றை சமரசம் செய்து கொள்ள தகுதியுடையவர் இறந்தபின் அந்த குற்றத்தை சமரசம்

(A) செய்ய இயலாது
(B) அரசு தரப்பால் செய்யப்படலாம்
(C) சட்டப்படியான வாரிசுகள் நீதிமன்ற அனுமதியின்றி செய்யலாம்
(D) சட்டப்படியான வாரிசுகள் நீதிமன்ற அனுமதியுடன் மட்டும் செய்யலாம்

3. Appointment of Public Prosecutor is given under

(A) Sec 25
(B) Sec 20
(C) Sec 24
(D) Sec 25A

அரசு குற்றத்துறை வழக்குரைஞர் நியமனம் குறித்து கூறும் பிரிவு

(A) பிரிவு 25
(B) பிரிவு 20
(C) பிரிவு 24
(D) பிரிவு 25 அ

4. Cognizable offence has been defined under

(A) Sec 2(a)

(B) Sec 2(c)

(C) Sec 2(i)

(D) Sec 2(1)

(பிடியாணை வேண்டா) கைது செய்ததற்குரிய குற்றம் குறித்து வரையறுக்கும் சட்டப்பிரிவு

(A) பிரிவு 2(a)

(B) பிரிவு 2(c)

(C) பிரிவு 2(i)

(D) பிரிவு 2(1)

5. Warrant Case means a case relating to an offence punishable with death, imprisonment for life or imprisonment for a term

(A) exceeding 3 years

(B) exceeding 2 years

(C) exceeding one year

(D) exceeding one years but less then 2 years

பிடியாணை வழக்கு என்பது மரண தண்டனை, ஆயுள் தண்டனை அல்லது ________ ஆண்டுகளுக்குக் குறையாத தண்டனை வழங்கக்கூடிய வழக்கு

(A) 3 ஆண்டுகளுக்கு மிகாமல்

(B) 2 ஆண்டுகளுக்கு மிகாமல்

(C) 1 ஆண்டுக்கு மிகாமல்

(D) 2 ஆண்டுக்கு மிகாமல் 1 ஆண்டுக்குக் குறைவாக

6. Complaint as Provided under 2(d) of Crpc

(A) Can be in writing only

(B) Can be oral

(C) either in writing (or) oral

(D) Can be by gestures

பிரிவு 2(d) –ன்படி குற்ற முறையீடு என்பது கீழ்க்கண்டவாறு இருக்கலாம்

(A) எழுத்துப்பூர்வமாக மட்டுமே

(B) வாய்மொழியாக இருக்கலாம்

(C) வாய்மொழியாகவோ (அ) எழுத்துப்பூர்வமாக

(D) சைகைகள் மூலமாக

7. The word 'Magistrate' mentioned in sec 156(3) of Crpc means

(A) a Judicial Magistrate

(B) a Special Executive Magistrate

(C) an Executive Magistrate

(D) either (A) or (B) or (C)

பிரிவு 156 (3) ன்படி குற்றவியல் துறை நடுவர் என்பது

(A) குற்றவியல் நீதித்துறை நடுவர்

(B) சிறப்பு நிருவாகத்துறை நடுவர்

(C) நிருவாகத்துறை நடுவர்

(D) மேற்சொன்ன மூவரில் ஒருவர்

8. A Metropolitan Magistrate has the Power to Pass Sentence, as Provided under section 29 of Crpc

(A) any sentence authorized by law except a sentence of death, or

(B) imprisonment for life or of imprisonment for a term exceeding seven years

(C) imprisonment for a term not exceeding three years and fine not exceeding Rs. 10,000/-

(D) imprisonment for a term not exceeding one year and fine not exceeding Rs. 1,000/-

பிரிவு 29ன்படி பெருநகர் குற்றத்துறை நடுவர், கீழ்காணும் தண்டனையை வழங்கும் அதிகாரம் பெற்றவர்

(A) மரண தண்டனையை தவிர சட்டத்ததால் அனுமதிக்கும் தண்டனை

(B) ஆயுள் தண்டனை அல்லது 7 வருடத்திற்கு அதிகமான சிறைத்தண்டனை

(C) மூன்று வருடத்திற்கு மிகாத சிறைத்தண்டனை மற்றும் ரூ,10,000/- வரை அபராதம்

(D) ஒரு ஆண்டு சிறைத்தண்டனை மற்றும் ரூ.1,000/- வரை அபராதம்

9. Arrest Means

(A) Every compulsion (or) physical restraint

(B) Total Restraint and complete deprivation of Liberty

(C) Hand Cuffing

(D) Confining in Jail

கைது என்பது

(A) கட்டாயப்படுத்துதல் அல்லது தடுத்து நிறுத்துதல்

(B) பூரணமாக சுதந்திரத்தை பறித்து விடும்படி பிடித்து வைத்தல்

(C) கை விலங்கிடுதல்

(D) சிறையில் அடைத்தல்

10. Which of the following is correct?

(A) Magistrate cannot arrest a person.

(B) a private person cannot arrest a person

(C) a police officer can arrest a person

(D) both (A) & (B)

கீழ்க்கண்டவற்றுள் எது தவறான கூற்று?

(A) குற்றவியல் நடுவர் கைது செய்ய இயலாது

(B) தனிப்பட்ட நபர் கைது செய்ய இயலாது.

(C) காவல்துறை அலுவலர் கைது செய்ய இயலும்

(D) (A) மற்றும் (B) இரண்டும்

11. It is mandatory for a police officer to inform the person arrested, the grounds of arrest and right of bail if the offence is not non-bail able under Crpc

(A) section 49 (B) section 50

(C) section 51 (D) section 54

பிணையில் விடாக் குற்றம் தவிர வேரெந்த குற்றத்தை செய்த நபரை கைது செய்யும்போது, காவல்துறை அதிகாரி கைது செய்வதற்கான காரணம் மற்றும் பிணையில் செல்லும் உரிமை குறித்து எந்தப் பிரிவில் கூறப்பட்டுள்ளது?

(A) பிரிவு 49 (B) பிரிவு 50

(C) பிரிவு 51 (D) பிரிவு 54

12. A police officer arresting a person may carry out the personal search of the person arrested as provided under

(A) section 50 (B) section 51

(C) section 54 (D) section 56

எந்தப் பிரிவின்படி கைது செய்யப்பட்ட நபரை, கைது செய்யும் காவல் அதிகாரி சோதனை செய்ய முடியும்?

(A) பிரிவு 50 (B) பிரிவு 51

(C) பிரிவு 54 (D) பிரிவு 56

13. Section 54 of Crpc provides for Medical examination of the accused.

(A) at the request of police officer

(B) at the request of the accused

(C) at the request of the victim

(D) both (A) and (B)

பிரிவு 54–ன் படி கைது செய்யப்பட்ட நபரை மருத்துவப் பரிசோதனை செய்வது

(A) காவல் அதிகாரியின் வேண்டுதலின்படி

(B) குற்றம் சாட்டப்பட்டவரின் வேண்டுதலின்படி

(C) பாதிக்கப்பட்டவரின் வேண்டுதலின்படி

(D) (A) மற்றும் (B) இரண்டும்

14. It is mandatory to produce the arrested person before the Magistrate within 24 hours of his arrest under Crpc

(A) section 56 (B) section 57

(C) section 42 (D) section 60

எந்தப்பிரிவின்படி கைது செய்தவரை கைது செய்யப்பட்ட நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள் குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்பாக ஆஜர்படுத்த வேண்டும்?

(A) பிரிவு 56 (B) பிரிவு 57

(C) பிரிவு 42 (D) பிரிவு 60

15. A proclamation requiring a person to appear must be published giving time to the person concerned

(A) not less than 30 days
(B) not less than 10 days
(C) not less than 20 days
(D) not less than 15 days

பகிரங்க அறிக்கையை வெளியிடும்போது, தலைமறைவான நபர் ஆஜராவதற்கு கொடுக்கவேண்டிய கால அளவு

(A) 30 நாட்களுக்கு குறையாமல்
(B) 10 நாட்களுக்கு குறையாமல்
(C) 20 நாட்களுக்கு குறையாமல்
(D) 15 நாட்களுக்கு குறையாமல்

16. An arrested person has a right to consult a legal practitioner of his choice. The consolation with the Lawyer

(A) may be in the presence of the Judicial officer
(B) may be in the presence of the Police officer but not within his hearing
(C) may be in the presence of the Police officer and within his hearing
(D) may be in the separate room

கைது செய்யப்பட்ட நபருக்கு தனது வழக்குரைஞர் உதவியை நாடும் உரிமை உள்ளது. அத்தகைய கலந்துரையாடல்

(A) நீதித்துறை நடுவர் முன் நடைபெற வேண்டும்
(B) காவல் துறை அதிகாரி முன் நடைபெறவேண்டும், ஆனால் கேட்கும் தொலைவில் இல்லை
(C) காவல் துறை அதிகாரி முன், கேட்கும் தொலைவில் நடைபெற வேண்டும்
(D) தனி அறையில் நடைபெற வேண்டும்

17. Section 91 of Crpc does not apply to

(A) the complainant
(B) the accused
(C) the witness
(D) the victim

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 91 கீழ்காணும் எவருக்கு பொருந்தாது?

(A) குற்ற முறையீட்டாளர்
(B) குற்றம் சாட்டப்பட்டவர்
(C) சாட்சி
(D) பாதிக்கப்பட்டவர்

18. Who among the following is not competent under sec 92 Crpc to order the postal authority (or) telegraph authority to deliver the document / thing?

(A) District Magistrate
(B) Judicial Magistrate
(C) Sessions Judge
(D) Chief Judicial Magistrate

பிரிவு 92–ன் படி அஞ்சலக (அ) தந்தித்துறை அதிகாரியின் பத்திரம்/பொருளினை ஒப்படைக்க ஆணையிட அதிகார வரம்பு இல்லாதவர் யார்?

(A) மாவட்ட நீதிபதி
(B) குற்றவியல் நீதித்துறை நடுவர்
(C) அமர்வு நீதிபதி
(D) தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்

19. Section 39 and 40 of Crpc make it mandatory to give information regarding commission of certain offence. Such information can be given to.

(A) a Magistrate
(B) a police officer
(C) either to Magistrate (or) Police Officer
(D) to both of them simultaneously

பிரிவு 39 மற்றும் 40–ன்படி நடக்க விடுக்கும் சில குற்றங்கள் தகவலை கீழ்க்கண்ட நபர்களிடம் தெரிவிக்கலாம்

(A) குற்றவியல் நடுவர்
(B) காவல் அதிகாரி
(C) குற்றவியல் நடுவர் (அ) காவல்துறை அதிகாரியிடம்
(D) இருவரிடமும் ஒரே நேரத்தில்

20. Section 87 of Crpc authorize issuance of warrant.

(A) in lieu of summons
(B) in addition to summons
(C) both in lieu of (or) in addition to summons
(D) in addition to proclamation

பிரிவு 87ன்படி பிடியாணை பிறப்பிப்பது

(A) அழைப்பாணைக்கு பதிலாக
(B) அழைப்பாணையுடன் சேர்த்து
(C) அழைப்பாணைக்கு பதிலாக (அ) அதனோடு சேர்த்து
(D) பகிரங்க அறிக்கையுடன் சேர்த்து

21. Joining of two (or) more independent and respectable inhabitants of the locality in which the place is to be searched is the mandate under

(A) section 100(1)
(B) section 100(2)
(C) section 100(3)
(D) section 100(4)

சோதனை செய்யும்போது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சுதந்திரமான மதிக்கத்தக்க அந்த பகுதியில் வசிக்கும் நபர்களின் முன்னிலையில் நடைபெற வேண்டும் என வலியுறுத்தும் பிரிவு

(A) பிரிவு 100(1)
(B) பிரிவு 100(2)
(C) பிரிவு 100(3)
(D) பிரிவு 100(4)

22. The registration of the case about the commission of a cognizable offence is under

(A) section 154
(B) section 155
(C) section 156(3)
(D) section 190

பிடியாணை வேண்டாக் குற்றம் குறித்து வழக்கு பதிவு செய்வது குறித்து கூறும் சட்டப்பிரிவு

(A) பிரிவு 154
(B) பிரிவு 155
(C) பிரிவு 156(3)
(D) பிரிவு 190

23. Under section 159 of Crpc, a preliminary inquiry into commission of offence can be conducted by the

(A) Magistrate laving Jurisdiction to take cognizance
(B) Under the orders of such Magistrate, any subordinate Magistrate
(C) Police officer
(D) Both (A) and (B)

பிரிவு 159–ன் படி குற்றம் குறித்த முதல்நிலை விசாரணை செய்ய அதிகாரம் பெற்ற நபர்

(A) புலன் கொள்ள அதிகாரம் பெற்ற நீதித்துறை நடுவர்
(B) அவரின் உத்தரவின் பேரில் கீழமை நீதித்துறை நடுவர்
(C) காவல்துறை அதிகாரி
(D) (A) மற்றும் (B) இரண்டும்

24. The Power to require attendance of the person acquainted with the facts and circumstances of the case under section 160 of Crpc, requires

(A) notice by telephone

(B) notice in writing

(C) both in writing and through telephone

(D) either in writing (or) through telephone

வழக்கின் பொருண்மைகளும், சூழ்நிலைகளையும் தெரிந்த நபரை சாட்சியாக ஆஜராக அழைக்கும் அறிவிப்பினை Crpc 160 சட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட வழிகளில் தெரியப்படுத்தலாம்.

(A) தொலை பேசி வழியாக

(B) எழுத்து மூலமாக

(C) தொலைபேசி மற்றும் எழுத்து மூலமாக

(D) தொலைபேசி அல்லது எழுத்து மூலமாக

25. The investigating officer under 160 under Crpc cannot require the attendance of a male at a place other than the place of his residence who is under the age of

(A) 15 years

(B) 18 years

(C) 21 years

(D) 14 years

பிரிவு 160–ன் படி கீழ்க்காணும் வயதுடைய நபரை குடியிருக்கும் இடமல்லாது வேறு இடத்தில் ஆஜராக கோர இயலாது.

(A) 15 வயதுக்கு கீழ்

(B) 18 வயதுக்கு கீழ்

(C) 21 வயதுக்கு கீழ்

(D) 14 வயதுக்கு கீழ்

26. A person can be summoned as a witness under sec 160 of Crpc by

(A) any police officer

(B) the station house officer

(C) investigating officer

(D) all the above

பிரிவு 160–ன் படி கீழ் சாட்சியாக அழைக்க அதிகாரம் உள்ளவர்

(A) ஏதேனும் ஓர் காவல் அதிகாரி

(B) காவல் நிலைய பொறுப்பு அதிகாரி

(C) விசாரணை அதிகாரி

(D) மேற்சொன்ன மூவரும்

27. A Confession under section 164 Crpc can be recorded by

(A) Metropolitan Magistrate

(B) Judicial Magistrate

(C) Executive Magistrate

(D) Both (A) and (B)

பிரிவு 164–ன் கீழ் ஒப்புதல் வாக்கு மூலங்களை பதிவு செய்ய அதிகாரம் பெற்றவர்

(A) பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர்

(B) நீதித்துறை நடுவர்

(C) நிருவாகத் துறை நடுவர்

(D) இரண்டும் (A) மற்றும் (B)

28. Object of Investigation is

(A) To punish accused

(B) To acquit accused

(C) To collective Evidence

(D) Top prove the case

புலன் விசாரணை செய்வதின் நோக்கம்

(A) குற்றச்சாட்டப்பட்டவரை தண்டிக்க

(B) குற்றச் சாட்டப்பட்டவரை விடுவிக்க

(C) சாட்சியங்களை சேகரிக்க

(D) குற்றத்தை நிரூபிக்க

29. As per section 436(A) the under trial prisoners can be detained for a maximum period not exceeding

(A) 14 Years

(B) ½ of the maximum punishment specified for that offence

(C) 21 years

(D) 1/4 th of the maximum punishment specified for that offence

பிரிவு 436(A) ன்படி, விசாரணை கைதி ஒருவரை சிறையில் அதிகபட்சமாக எவ்வளவு காலம் வைக்கலாம்?

(A) 14 வருடங்கள்

(B) அந்த குற்றத்திற்குரிய தண்டனையில் 1/2க்கு மிகாமல்

(C) 21 வருடங்கள்

(D) அந்த குற்றத்திற்குரிய தண்டனையில் 1/4 க்கு மிகாமல்

30. An order of life Imprisonment may be passed by

(A) Chief Judicial Magistrate

(B) Sessions Judge

(C) Metropolitan Magistrate

(D) Magistrate of first class

ஆயுள் தண்டனை வழங்க அதிகாரம் உள்ளவர்

(A) தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்

(B) அமர்வு நீதிபதி

(C) பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர்

(D) முதல் வகுப்பு குற்றவியல் நீதித்துறை நடுவர்

31. A sentence of imprisonment for a term of 10 years may be passed by which one of the following?

(A) Magistrate of first class

(B) Chief Judicial Magistrate

(C) Assistant sessions judge

(D) Chief Metropolitan Magistrate

10 வருடகள் சிறைத்தண்டனை வழங்கும் அதிகாரம் யாருக்கு உள்ளது?

(A) முதல் வகுப்பு குற்றவியல் நீதித்துறை நடுவர்

(B) தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்

(C) உதவி அமர்வு நீதிபதி

(D) பெருநகர தலைமை குற்றவியல் நடுவர்

32. Under which section of Crpc, Police can arrest an accused without warrant?

(A) section 37 (B) section 40

(C) section 42 (D) section 41

எந்த பிரிவின் கீழ், காவல்துறை அதிகாரி குற்றம் சாட்டப்பட்டவரை பிடியாணையின்றி கைது செய்யலாம்?

(A) பிரிவு 37 (B) பிரிவு 40

(C) பிரிவு 42 (D) பிரிவு 41

33. Classification of offences had been provided under

(A) 1st Schedule
(B) 2nd Schedule
(C) section 320
(D) section 321

குற்றவியல் நடைமுறை சட்டத்தின் எந்த பகுதியில் குற்றங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளது?

(A) முதல் அட்டவணை
(B) இரண்டாவது அட்டவணை
(C) பிரிவு 320
(D) பிரிவு 321

34. In proceeding under section 107 of Crpc, an execute Magistrate may require to execute a bond for keeping period for such period not exceeding ———— as magistrate thinks fit

(A) One year
(B) Two years
(C) Three years
(D) Six months

பிரிவு 107–ன்படி நிருவாகத்துறை நடுவரின் நடவடிக்கையில் அமைதியைக் காப்பதற்காக எவ்வளவு காலத்திற்கு பத்திரமொன்றை எழுதி தர உத்தரவிடலாம்?

(A) ஓராண்டு
(B) 2 ஆண்டுகள்
(C) 3 ஆண்டுகள்
(D) 6 மாதங்கள்

35. Under section 106 of Crpc, which of the following courts has power to order the offender to execute a bond.

(A) Sessions court
(B) Magistrate of 1st class
(C) Appellate or Revisional court
(D) All the above

பிரிவு 106ன் கீழ், கீழ்க்கண்ட எந்த நீதிமன்றம் குற்றவாளியிடம் இருந்து பத்திரம் எழுதி வாங்க அதிகாரமுடையது?

(A) அமர்வு நீதிமன்றம்
(B) முதல் வகுப்பு குற்றவியல் நீதித்துறை நடுவர்
(C) மேல் முறையீடு அல்லது சீராய்வு நீதிமன்றம்
(D) மேற்சொன்ன அனைத்தும்

36. Under which section of Crpc, an accused person can himself be a competent witness?

(A) Section 315 (B) Section 300

(C) Section 313 (D) Section 317

எந்த பிரிவின் கீழ், குற்றம் சாட்டப்பட்டவரே சாட்சி சொல்ல தகுதியுடையவர் ஆவார்?

(A) பிரிவு 315 (B) பிரிவு 300

(C) பிரிவு 313 (D) பிரிவு 317

37. Legal Aid to the accused at state expenses is ensured under

(A) Section 301 (B) Section 304

(C) Section 306 (D) Section 305

அரசு செலவில் குற்றச்சாட்டப்பட்டவருக்கு சட்ட உதவி வழங்கும் சட்டப்பிரிவு

(A) பிரிவு 301 (B) பிரிவு 304

(C) பிரிவு 306 (D) பிரிவு 305

38. Section 300 of Crpc enables the accused

(A) Withdrawal from prosecution

(B) Against double prosecution

(C) Release on probation of good conduct

(D) Compounding of offence

பிரிவு 300–ன் கீழ், குற்றச்சாட்டப்பட்டவருக்கு அளிக்கப்பட்டது.

(A) அரசு தரப்பில் திரும்ப பெறுதல்

(B) இரட்டை இடரிலிருந்து பாதுகாப்பு

(C) நன்னடத்தை அடிப்படையில் விடுதலை

(D) சமரசம் செய்து கொள்ளுதல்

39. Procedure for summery trial is provided under

(A) Section 251 to 260 (B) Section 238 to 250

(C) Section 260 to 265 (D) Section 255 to 265

சுருக்கு முறை விசாரணை குறித்த சட்டப்பிரிவுகள்

(A) 251 முதல் 260 வரை (B) 238 முதல் 250 வரை

(C) 260 முதல் 265 வரை (D) 255 முதல் 265 வரை

40. A Private person may arrest any person who ———— in his presence.

(A) Commits non cognizable and bail able offence

(B) Commits non cognizable offence

(C) Commits bail able offence

(D) Commits cognizable and non bail able offence

தனி நபர் தன் முன்னால் குற்றம் நடைபெறும் போது கீழ்க்கண்ட சூழ்நிலையில் கைது செய்யலாம்?

(A) பிடியாணை வேண்டும், பிணையில் விடும் குற்றம்

(B) பிடியாணை வேண்டும் குற்றம்

(C) பிணையில் விடும் குற்றம்

(D) பிணையில் விடா, பிடியாணை வேண்டா குற்றம்

41. Who can withdraw a case from the prosecution under section 321 of Crpc?

(A) State Government

(B) Public prosecutor in charge of a case with the permission of the court

(C) Public prosecutor in charge of a case even without the permission of the court

(D) Central Government

பிரிவு 321–ன் படி குற்றவழக்கை யார் திரும்ப பெற முடியும்?

(A) மாநில அரசாங்கம்

(B) நீதிமன்ற அனுமதியுடன் சம்பந்தப்பட்ட அரசு வழக்குரைஞர்

(C) நீதிமன்ற அனுமதியின்றி சம்பந்தப்பட்ட அரசு வழக்குரைஞர்

(D) மத்திய அரசாங்கம்

42. There shall be no appeal by a convicted person where a Magistrate of first class passes only a sentence of fine, not exceeding.

(A) Rs. 100
(B) Rs. 200
(C) Rs. 300
(D) Rs. 250

முதல் வகுப்பு குற்றவியல் நீதித்துறை நடுவர் ரூ.———— மிகாத அபராதம் வழங்கிய தீர்ப்பினை எதிர்த்து குற்றவாளி மேல்முறையீடு செய்ய இயலாது

(A) ரூ.100
(B) ரூ.200
(C) ரூ.300
(D) ரூ.250

43. Court of sessions has the original Jurisdiction to take cognizance of offences by virtue of

(A) section 190
(B) section 193
(C) section 199
(D) section 198

கீழ்க்கண்ட பிரிவின் கீழ், அமர்வு நீதிமன்றம் அசல் அதிகாரத்தை பயன்படுத்தி குற்றங்களை புலன் கொள்ளலாம்?

(A) பிரிவு 190
(B) பிரிவு 193
(C) பிரிவு 199
(D) பிரிவு 198

44. Taking cognizance is

(A) a judicial function
(B) an administrative function.
(C) a supervisory function
(D) a managerial function

குற்றங்களை புலன் கொள்ளுதல் என்பது

(A) நீதித்துறைச் செயல்
(B) நிருவாகச் செயல்
(C) மேற்பார்வை செயல்
(D) மேலாண்மை செயல்

45. Magistrate may take cognizance based on

(A) Police report (B) Complaint

(C) suo moto (D) all the above

நீதித்துறை நடுவர் இதன் அடிப்படையில் புலன் கொள்ளலாம்

(A) காவல் அறிக்கை (B) குற்ற முறையீடு

(C) தாமாக முன்வந்து (D) இவையனைத்தும்

46. On receipt of a complaint the Magistrate has the jurisdiction

(A) to conduct inquiry himself

(B) to direct the police to investigate

(C) both (A) and (B)

(D) neither (A) or (B)

குற்ற முறையீட்டை பெற்றுக் கொண்ட நீதித்துறை நடுவர்

(A) தாமே விசாரணை செய்யலாம்

(B) புலனாய்வு செய்ய காவல் அதிகாரிக்கு உத்தரவிடலாம்

(C) (A) மற்றும் (B) இரண்டும்

(D) மேற்சொன்ன எதுவுமில்லை

47. Under section 436 of Crpc bail can be granted by

(A) Police

(B) Court

(C) Court as well as police

(D) Prosecutor

பிரிவு 436–ன் கீழ், பிணை வழங்க, அதிகாரம் பெற்றவர்

(A) காவல் துறை அதிகாரி

(B) நீதிமன்றம்

(C) காவல் அதிகாரி மற்றும் நீதிமன்றம்

(D) அரசு வழக்குரைஞர்

48. Under section 311 of Crpc, a witness can be called by

(A) prosecution (B) defense

(C) court (D) all the above

பிரிவு 311–ன் கீழ், சாட்சியை அழைக்க அதிகாரம் பெற்றவர்

(A) அரசு தரப்பு (B) குற்றம் சாட்டப்பட்டவரின் தரப்பு

(C) நீதிமன்றம் (D) மேற்சொன்ன அனைத்தும்

49. Under section 315 of Crpc, an accused

(A) Cannot be a witness

(B) Can be compelled to give his own evidence

(C) Can be called as a witness on his own request

(D) Cannot be compelled to give evidence

பிரிவு 315–ன் கீழ் குற்றம் சாட்டப்பட்ட நபர்

(A) சாட்சியாக முடியாது

(B) சாட்சியளிக்க கட்டாயப்படுத்த முடியும்

(C) தன் விருப்பத்தின் பேரில் சாட்சியளிக்க முடியும்

(D) சாட்சியளிக்க கட்டாயப்படுத்த முடியாது

50. The compensation to the victim can be granted on

(A) Conviction

(B) Acquittal

(C) Discharge

(D) Release

பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்க, குற்றம்

(A) தண்டனை வழங்கப்பட்டிருக்க வேண்டும்

(B) விடுதலை

(C) குற்றச்சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும்

(D) குற்றச்சாட்டப்பட்டவர் விடுதலையாகிருக்க வேண்டும்

51. The amount of fine which can be imposed by a Magistrate of 1st Class has been enhanced from Rs. 5000 to Rs. ———— as per Amendment Act, 2005.

(A) Rs. 6000 (B) Rs. 7000

(C) Rs. 10000 (D) Rs. 8000

2005–ம் ஆண்டு சட்டத்திருத்தத்தின்படி முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் வழங்கக் கூடிய அபராதம் ரூ.5000 விருந்து ரூ.———— ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

(A) ரூ.6000 (B) ரூ.7000

(C) ரூ.10000 (D) ரூ.8000

52. In which year, the definition for victim was inserted in Crpc, through Amendment

(A) 2003 (B) 2005

(C) 2008 (D) 2013

எந்த ஆண்டு சட்டத்திருத்தின்படி, பாதிக்கப்பட்டவர் என்ற சொல்லுக்கான வரையறை குற்றவியல் நடைமுறை சட்டத்தில் சேர்க்கப்பட்டது?

(A) 2003 (B) 2005

(C) 2008 (D) 2013

53. As per the definition under sec 2of Crpc 'Victim' includes.

(A) Victim's guardian

(B) Victim's guardian or legal heir

(C) Victim's neighbour

(D) Victim's close friend

பிரிவு 2(wa) கூறியுள்ள வரையறையின்படி, பாதிக்கப்பட்டவர் என்பதில் கீழ்க்கண்டவரும் அடங்குவார்.

(A) பாதிக்கப்பட்டவரும் பாதுகாவலர்

(B) பாதிக்கப்பட்டவரும் பாதுகாவலர் (அ) வாரிசு

(C) பாதிக்கப்பட்டவரும் அண்டைவீட்டார்

(D) பாதிக்கப்பட்டவரும் நெருங்கிய நண்பர்

54. A police officer can arrest any person without warrant for a

(A) cognizable offence (B) non–cognizable offence

(C) summons case (D) warrant case

கீழ்க்கண்ட குற்றத்திற்கு காவல்துறை அதிகாரி பிடியாணையின்றி கைது செய்யலாம்?

(A) பிடியாணை வேண்டும் குற்றம் (B) பிடியாணை வேண்டா குற்றம்

(C) அழைப்பாணை வழக்கு (D) பிடியாணை வழக்கு

55. Magistrate is not empowered to Conduct

(A) Trial (B) Judicial proceeding

(C) Inquest (D) Investigation

நீதித்துறை நடுவர் கீழ்க்கண்டவற்றுள் எதை செய்ய இயலாது?

(A) வழக்கு விசாரணை (B) நீதிமன்ற விசாரணை

(C) இறப்பாய்வு (D) புலனாய்வு

56. The Magistrate records the confession statement of an accused under

(A) section 164 (B) section 162

(C) section 281 (D) section 160

எந்த விதியின் கீழ், நீதித்துறை நடுவர் குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலத்தை பதிவு செய்ய முடியும்?

(A) பிரிவு 164 (B) பிரிவு 162

(C) பிரிவு 281 (D) பிரிவு 160

57. Maintenance of case diary by the investigating officer is Mandatory under

(A) section 162 (B) section 167

(C) section 172 (D) section 174

புலனாய்வு அதிகாரி புலனாய்வு எடுக்கும் நடவடிக்கைகள் குறித்த நாட்குறிப்பு பேணுவது கட்டாயம் என கூறும் பிரிவு

(A) பிரிவு 162 (B) பிரிவு 167

(C) பிரிவு 172 (D) பிரிவு 174

58. As per section 174 of Crpc, Inquest can be conducted by

(A) Magistrate (B) Prosecutor

(C) Police officer (D) Complainant

பிரிவு 174–ன் கீழ் இறப்பாய்வு செய்ய அதிகாரம் பெற்றவர்

(A) நீதித்துறை நடுவர் (B) அரசு வழக்குரைஞர்

(C) காவல் அதிகாரி (D) குற்ற முறையீட்டாளர்

59. Sec 167 Crpc authorizes remand of an accused in

(A) Judicial custody

(B) Police custody

(C) Either Judicial (or) Police custody

(D) Restoration to parents

பிரிவு 167–ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரை எவ்வகை காவலுக்கு உட்படுத்தலாம்?

(A) நீதிமன்ற காவல்

(B) காவல்துறை பாதுகாவல்

(C) நீதிமன்ற காவல் (அ) காவல்துறை காவல்

(D) பெற்றொர் பாதுகாப்பில்

60. Police custody can be further extended beyond 15 days by

(A) Magistrate (B) Sessions courts

(C) High court (D) None of the above

காவல் துறை காவலை 15 நாட்களுக்கு மேல் நீட்டிக்கும் அதிகாரம் பெற்றது

(A) நீதித்துறை நடுவர் (B) அமர்வு நீதிமன்றம்

(C) உயர்நீதிமன்றம் (D) மேற்சொன்ன எதுவுமில்லை

61. After dismissal of a complaint under sec 203 Crpc, a fresh similar complain on same

(A) allowed

(B) banned

(C) entertained only in exceptional cases

(D) not banned under any circumstances.

பிரிவு 203–ன் கீழ் புகார் தள்ளுபடி செய்யப்பட்ட பின் அதே பொருண்மைகளுக்கு புதிய புகார் தாக்கல் செய்ய

(A) அனுமதிக்கப்பட்டுள்ளது

(B) தடை செய்யப்பட்டுள்ளது

(C) சிறப்பு தருணங்களில் அனுமதிக்கப்படும்

(D) எந்த சூழ்நிலையிலும் தடையில்லை

62. Section 216 of Crpc deals with

(A) Addition (or) alteration

(B) Joinder of charges

(C) Joinder of accused

(D) Form of charge

பிரிவு 216 குற்றவியல் நடைமுறை சட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது

(A) குற்றச்சாட்டின் மாற்றம் (அ) சேர்த்தல்

(B) குற்றச்சாட்டுகளை இணைத்தல்

(C) குற்றச்சாட்டப்பட்டவர்களை இணைத்தல்

(D) குற்றச்சாட்டின் வடிவம்

63. Joinder of charges is permissible under

(A) Section 217 (B) Section 218

(C) Section 220 (D) Section 215

குற்றச்சாட்டுகளின் சேர்க்கை குறித்து கூறும் பிரிவு

(A) பிரிவு 217 (B) பிரிவு 218

(C) பிரிவு 220 (D) பிரிவு 215

64. Section 299 of Crpc deals with examination of witness

(A) In the presence of accused
(B) In the absence of accused
(C) In the presence of complainant
(D) In the absence of complainant

பிரிவு 299–ன் கீழ் சாட்சியத்தினை பதிவு செய்வது

(A) எதிரியின் முன்னிலையில்
(B) எதிரி இல்லாத போது
(C) புகார் தரார் முன்னிலையில்
(D) புகார் தரார் இல்லாத போது

65. A case can be committed to the court of sessions, by a Magistrate under

(A) Section 209
(B) Section 323
(C) Section 324
(D) Both (A) and (B)

எந்த விதியின் கீழ் ஒரு வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு நீதித்துறை நடுவரால் விசாரணைக்கு அனுப்பப்படலாம்?

(A) பிரிவு 209
(B) பிரிவு 323
(C) பிரிவு 324
(D) (A) மற்றும் (B) இரண்டும்

66. The Chief Judicial Magistrate may pass sentences of

(A) Life Imprisonment
(B) not exceeding 10 years
(C) not exceeding 7 years
(D) not exceeding 3 years

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவரால் வழங்கப்படும் தண்டனை வரம்பு

(A) ஆயுள் தண்டனை
(B) பத்தாண்டுகளுக்கு மிகாமல்
(C) 7 ஆண்டுகளுக்கு மிகாமல்
(D) 3 ஆண்டுகளுக்கு மிகாமல்

67. The form of warrant is mentioned under

(A) Section 61
(B) Section 62
(C) Section 71
(D) Section 70

எந்த பிரிவின் கீழ் பிடியாணையின் வடிவம் தெரிவிக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 61
(B) பிரிவு 62
(C) பிரிவு 71
(D) பிரிவு 70

68. The Special power of High Court with regard to Bail is given under.

(A) Section 436 (B) Section 437

(C) Section 439 (D) Section 435

பிணையினை வழங்குவதில் உயர்நீதிமன்றத்தின் சிறப்பு அதிகாரம் குறித்து கூறும் பிரிவு

(A) பிரிவு 436 (B) பிரிவு 437

(C) பிரிவு 439 (D) பிரிவு 435

69. As per section 357 of Crpc, Compensation is granted to

(A) Accused (B) Victim

(C) Complainant (D) Witness

பிரிவு 357–ன் படி, இழப்பீடு யாருக்கு வழங்கப்படுகிறது?

(A) குற்றம் சாட்டப்பட்ட நபர் (B) பாதிக்கப்பட்ட நபர்

(C) புகார் தரார் (D) சாட்சி

70. As per section 31 of Crpc, the aggregate consecutive sentence passed shall not exceed

(A) 14 years (B) 20 years

(C) 21 years (D) 30 years

பிரிவு 31–ன் படி பல்வேறு குற்றங்களுக்கு கொடுக்கப்படும் தொடர் தண்டனையின் உச்ச வரம்பு

(A) 14 வருடங்கள் (B) 20 வருடங்கள்

(C) 21 வருடங்கள் (D) 30 வருடங்கள்

71. Death sentence cannot be committed by

(A) Appellate court (B) President

(C) Appropriate Government (D) Sessions judge

மரணத் தண்டனையை குறைக்கும் அதிகாரம் பெறாதவர்?

(A) மேல்முறையீட்டு நீதிமன்றம் (B) ஜனாதிபதி

(C) சம்பந்தப்பட்ட அரசாங்கம் (D) அமர்வு நீதிபதி

72. Which section of Crpc deals with imprisonment for default of fine

(A) section 29 (B) section 30

(C) section 28 (D) section 31

அபராதம் கட்ட தவறினால் சிறைத்தண்டனை பற்றி கூறும் சட்டப் பிரிவு

(A) பிரிவு 29 (B) பிரிவு 30

(C) பிரிவு 28 (D) பிரிவு 31

73. The famous case of "D.K. Besu Vs. State of west Bengal (1997) 6 section 642" is relating to

(A) Arrest (B) Confession

(C) Search (D) Investigation

"D.K பாசு எதிர் மேற்கு வங்க அரசு" என்ற வழக்கு (1997) பிரிவு 642 (6)-ல் எது தொடர்புடையது?

(A) கைது (B) ஒப்புதல் வாக்குமூலம்

(C) சோதனை (D) புலனாய்வு

74. Place of Inquiry (or) Trial when the offence is committed on Journey (or) Voyage is mentioned under

(A) Section 177 (B) Section 183

(C) Section 178 (D) Section.188

பயணம் அல்லது கடற்பயணத்தின் போது நடைபெறும் குற்றங்களை விசாரிக்கும் அதிகார வரம்பு பற்றிய பிரிவு

(A) பிரிவு 177 (B) பிரிவு 183

(C) பிரிவு 178 (D) பிரிவு 188

75. Section 309 of Crpc deals with

(A) Summary Trial (B) Fair Trial

(C) Expeditious Trial (D) Sessions Trial

பிரிவு 309 குற்றவியல் நடைமுறை சட்டம் வழங்குவது

(A) சுருக்குமுறை வழக்கு விசாரணை (B) நேரிய வழக்கு விசாரணை

(C) துரித வழக்கு விசாரணை (D) அமர்வு நீதிமன்ற வழக்கு விசாரணை

76. Which section of Crpc. Release the convict on probation of good conduct

(A) Section 357 (B) Section 350

(C) Section 359 (D) Section 360

ஒரு குற்றவாளியை நன்னடத்தைக் கண்காணிப்பின் பேரில் விடுவிப்பது குறித்த கூறும் பிரிவு

(A) பிரிவு 357 (B) பிரிவு 350

(C) பிரிவு 359 (D) பிரிவு 360

77. Section 383 of Crpc, provides this kind of appeal

(A) Against acquittal (B) Against conviction

(C) Jail appeal (D) By prosecution

பிரிவு 360அளிக்கும் மேல் முறையீடு எது தொடர்புடையது?

(A) விடுதலைக்கு எதிராக (B) தண்டனைக்கு எதிராக

(C) சிறை மேல் முறையீடு (D) அரசு தரப்பு மேல்முறையீடு

78. Under section 407 of Crpc, the High Court may order to transfer a case for

(A) Fair and Impartial trial

(B) General convenience of parties

(C) Question of law will arise

(D) All the above

பிரிவு 407–ன் கீழ், உயர்நீதி மன்றம் எப்போது வழக்கினை மாற்றுதல் உத்தரவு பிறப்பிக்க இயலும்?

(A) நேர்மையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணை

(B) சட்டவினா ஏதும் எழ வாய்ப்பிருக்கும் போது

(C) தரப்பினர்களின் வசதிக்காக

(D) மேற்சொன்ன அனைத்தும்

79. Suspension of sentence pending the appeal is ensured under

(A) Section 372 (B) Section 376

(C) Section 389 (D) Section 437

மேல்முறையீடு நிலுவையிலிருக்கும் போது தண்டணையை நிறுத்தி வைப்பது குறித்த கூறும் பிரிவு?

(A) பிரிவு 372 (B) பிரிவு 376

(C) பிரிவு 389 (D) பிரிவு 437

80. As per section 433 of Crpc, Life Imprisonment may be commuted into imprisonment for a term not exceeding.

(A) 20 years (B) 14 years

(C) 30 years (D) 7 years

பிரிவு 433–ன் படி, ஆயுள் தண்டணையை ____________ வருடங்களுக்கு மிகாத சிறைத்தண்டனையாக மாற்றலாம்

(A) 20 ஆண்டுகள் (B) 14 ஆண்டுகள்

(C) 30 ஆண்டுகள் (D) 7 ஆண்டுகள்

TC.118

135/DD/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## THE JAIL TEST PART – I (b) CODE OF CRIMINAL PROCEDURE

(With Books)

Maximum Time : 30 minutes Maximum Marks : 20

### *IMPORTANT INSTRUCTIONS*

### DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**Answer any FOUR questions.**

எவையேனும் நான்கு கேள்விகளுக்கு விடையளிக்கவும். **(4 × 5 = 20)**

1. Explain about local jurisdiction of judicial Mgistrates.
   நீதித்துறை நடுவர்களுக்குள்ள வட்டார அதிகார வரம்பு குறித்து விளக்குக.

2. When search-warrant may be issued – Explain.
   சோதனை ஆணைகள் எப்போது பிறப்பிக்கப்படலாம் – விளக்குக.

**[Turn over**

3. When Officer in charge of police station may require another to issue search warrant.

காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் மற்றொருவரை எப்போது சோதனை ஆணை பிறப்பிக்குமாறு கோரலாம்?

4. Write about the previous conviction or acquittal how proved.

முந்திய தண்டனை அல்லது விடுதலையை எவ்வாறு மெய்ப்பிப்பது என்பது குறித்து எழுதவும்.

5. Write about the procedure in case of accused being lunatic.

எதிரி பித்தராக இருக்கும் நேர்வில் நடைமுறை என்ன என்பது குறித்து எழுதவும்.

6. State the Abatement of appeals.

மேல்முறையீடுகள் அற்றுப்போதல் குறித்து எழுதவும்.

---